# ஸ்ரீ மலர்





சுன்னாகம் ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்,
வருஷப்புலம், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## பெரியதம்பி ஜெயந்தன் (ஸ்ரீ)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு வெளியீடு

16-02-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மலர்



சுன்னாகம் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
வருஷப்புலத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## பெரியதம்பி ஜெயந்தன் (ஸ்ரீ)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு வெளியீடு

**16-02-2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் அணையாத
தீபமாய் நின்று ஒளி தந்து
இவ்வுலகில் நாம் வாழ்வாங்கு வாழ
ஏற்ற வழிவகைகள் செய்து
வழிகாட்டி நின்று
இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட எம் குடும்ப
குல விளக்கின் பாதங்களில்
இம் மலரினைச் சூட்டி
காணிக்கையாக்குகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு
21-01-1964

உதிர்வு
17-01-2021

அமரர்

# திரு. பெரியதம்பி ஜெயந்தன்

## திதி வெண்பா

ஆண்டுநல் சார்வரியில் தைப்பூர்வ பக்கத்துப்
பூண்டுவரும் பஞ்சமிசேர் நற்திதியில் - மாண்பாரும்
சுன்னாகம் வாழ்ஜெயந்தன் சேர்ந்தார் ஐயனாரின்
பொன்னடிக்கே என்று புகழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

### விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

### தேவாரம்

என்ன புண்ணியம்செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாக சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாட ரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடி யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும்போதுன் அடியின் கீழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவெல பெருமாளே

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். உயர்திரு பெரியதம்பி ஜெயந்தன்
## அவர்களின்
## வாழ்க்கைச் சரிதம்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

இது வள்ளுவர் வாக்கு. நேற்றிருந்த ஒருவர் இன்றில்லை என்று கூறும் பெருமை பெற்றது இவ்வுலகு. இப்பிரபஞ்சமதில் இறைவன் படைப்புக்கள் இறைவனாலேயே ஆக்கவும் அழிக்கவும் படுகின்றன. பிறப்பிறப்பு மனித சக்திக்கப் பாற்பட்டவை. விதிப்பயன்படியே யாவும் நிகழ்கின்றன.

இதற்கமைய இவ்வுலகத்திலே பூசாரியார் பரம்பரையிலே பிறந்து சிறு வயது முதல் இறைதொண்டு புரிந்து அகவை ஐம்பத்தேழில் இப்பூவுலகை விடுத்து புகழிடம் எய்திய பெருமை அமரர் பெரியதம்பி ஜெயந்தனுக்குரியது.

சைவமும், தமிழும் ஒருங்கே திகழும், திசை எங்கணும் கோவில்களும், கோபுரங்களும் எழுந்து நிற்கும், கற்றறிந்த சான்றோரை, ஊருக்குப் பெருமை சேர்த்திடும் ஏருழுவர் தம்மை ஒருங்கே கொண்டமைந்த சுன்னாகம் ஐயனார் கோவிலடிப் பதியில் 1964ஆம் ஆண்டு தைத் திங்கள் 21ஆம் நாள் ரேவதி நட்சத்திரத்தில் பெரியதம்பி - செல்லம்மா தம்பதியினருக்கு இளைய புதல்வனாகத் தோன்றினார். இந்திராதேவி, வாமதேவன், லோகநாதன் ஆகியோர் இவரின் உடன்பிறப்புக்கள். சிறு வயதிலேயே தந்தையாரையும், சகோதரியையும் இழந்தார்.

இவர் தனது கல்வியை யா/சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் கற்றார். கல்வி கற்கும் காலங்களில் நாடகத்துறையில் பெண் பாத்திரமேற்று நடித்து அனைவரதும் அன்புக்குப் பாத்திரமானார். பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பணிபுரிந்தார். சிறிது காலம் ஐயனார் கோயில் அர்ச்சகராகவும், தர்மகர்த்தாவாகவும் செயற்பட்டார்.

"இல்லறம் அல்லது நல்லறம் அன்று" என்பதனை உணர்ந்து வரியப்புலத்தில் வாழ்ந்த சண்முகம் - சிவபாக்கியத்தின் மகளான சிவானந்தினியை 1989இல் திருமணம் செய்தார். சிவனேஸ்வரன், சிவனேஸ்வரி, சிவானந்தம், சிவபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு மைத்துனரானார். இவர்கள் அனைவரும் நல்லதொரு குடும்பமாக வாழ்ந்து வாழ்வில் மேன்மை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ஆம் ஆண்டு போர் மேகங்கள் எம் மண்ணை ஆக்கிரமித்தன. துன்பங்கள் தொடர இவ்விடத்தில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக வவுனியாவில் மனைவியின் சகோதரியின் குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்ந்தார். பெறாமக்களான ஸ்ரீபிரியதர்சினி, சுஜீவன் ஆகியோர் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென்பதனை இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டார்.

2002ஆம் ஆண்டு மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பி வந்து, வாழ்ந்து வரும் காலங்களில் சிறு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுழைத்தார். உழவுத் தொழிலையும் கண் எனப் போற்றினார். இடையிடையே நோய் அவரை அணுகிய போதும் அதன் வலியை மறந்து சமூக சேவைகள் செய்வதில் காலத்தைக் கழித்தார். மகாமாரி அம்மன் ஆலயத்திற்காகச் செய்த சேவைகள் பலவாகும். சில காலம் வைரவப் பெருமானுக்கும் அர்ச்சகராகச் செயற்பட்டார்.

மகாமாரியம்மனின் அன்னதான மண்டபத் திருப்பணிகளை பல சிரமங்களுக்கு மத்தியில் நிறைவேற்றி ஆத்ம திருப்தி அடைந்தார். மண்ணில் நல்ல வண்ணமாக எல்லோரும் வாழவேண்டும் என நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தவர், எவரும் எதிர்பாராத வேளையில் 2021-01-16 அன்று இறைவன் கழல் சேர்ந்தார்.

**உங்களிடம் எதிர்மறையான தோல்வியான எண்ணங்கள் ஏதும் எழுகின்ற பொழுது உடனடியாக அதனை உடைத்துவிட்டு எப்பொழுதும் சாதகமான சிந்தனையில் இருங்கள்.**

**எப்பொழுதும் உங்கள் தொல்லைகளையும் துயரங்களையும் சிறிதாக எண்ணி, உங்கள் பலத்தையும் நம்பிக்கையையும் பெரிதாக எண்ணுங்கள்.**

*- சுவாமி விவேகானந்தர் -*

**நம்மில் தெய்வீகம் மேலோங்கும்போது இருப்பதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் நமக்கு ஓர் அழகைக் கொடுக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்த குருக்கள்**

**பிரதமகுரு, தெஹிவளை ஸ்ரீ வெங்கடேஸ்வர விஷ்ணு கோவில்**
**ஆதீனகர்த்தா, சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார்**



# அனுதாபச் செய்தி

சுன்னாகம் ஐயனார் கோயில் ஆதீனகர்த்தா தெய்வத்திரு பெரியதம்பியின் கனிஷ்டகுமாரன் சிறி என எல்லோராலும் அழைக்கப்படும் ஜெயந்தனின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த கவலையடைந்தேன். சின்னஞ்சிறு வயது முதல் எங்கள் குடும்பத்தினருடன் தொடர்புடையவர். சிறு வயதிலேயே சுறுசுறுப்பும் தெய்வ நம்பிக்கையும் கொண்டவர்.

ஆலய வேலைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். வாழ்க்கைச் சக்கரத்தில் பல மேடு பள்ளங்களைக் கடந்து போராடி பின் நல்ல வாழ்க்கைத் துணை அமையப்பெற்று அமைதியாக வாழ்ந்துவரும் போது நோயின் பிடியில் சிக்கினாலும் முச்சக்கர வண்டியுடன் காலம் உருண்டோடியது. எனினும் காலனின் கணக்கிற்கு யாரும் விதிவிலக்கல்ல என்பதற்கமைய இவரது வாழ்க்கை முற்றுப்பெற்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் குல தெய்வங்கள் பிள்ளையார், ஐயனார், மகாமாரித் தாயாரைப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

**சோ. சந்திரகாந்த குருக்கள்**
ஆதீனகர்த்தா
சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்

எப்போதும் உங்கள் இலக்கை நிரந்தரமாக மனதிலே பதிந்து வையுங்கள்.
*- சுவாமி விவேகானந்தர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்கின்ற வள்ளுவர் குறள்மணிக்கேற்ப வாழ்ந்தவர் அமரர் பெரியதம்பி பூசாரியார் மகன் ஜெயந்தன் ஆவார். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்" என்ற பெருமைக்குரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் அப்பிறவியின் மகிமையை உணர்ந்து வாழவேண்டிய கடமை உண்டு. கற்றும், கேட்டும், சிந்தித்தும், தெளிந்தும் நிற்பதற்காகவே இறைவன் இப்பிறவியைப் படைத்தார். இறைவனை மெய்யன்போடு வழிபட்டு இறை கருமங்களில் நாம் ஈடுபட வேண்டும். அந்த வகையில் தனது வாழ்நாளெல்லாம் ஐயனார் கோவில், வருஷப்புலம் மஹாமாரி அம்பாள் ஆலயங்களில் சிவதர்ம செயற்பாடுகளில் ஈடுபட்டு செம்மைப்படுத்தி வளர்ந்ததனால் எல்லோரிடமும் அன்பையும் பாசத்தையும் பண்பையும் பெற்ற உத்தமர்.

எந்த ஆலயங்களுக்குச் சென்றாலும் குருமாரோடு அணுகி அளவளாவி குரு பக்தியை என்றும் பேணிப் போற்றும் உத்தமராவார். வருஷப்புலம் மஹாமாரி அம்பாள் மீது அபார பக்தி கொண்டு ஆலய வளர்ச்சிக்காக அரும்பெரும் தொண்டுகளில் ஈடுபட்டு சகலரதும் நன்மதிப்பின் மூலம் தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்து உடல், உயிர் அனைத்தையும் இறை பணிக்கு தர்ம சாதனம் செய்த உத்தமர். இன்று இல்லையென்றாலும் அவரது ஆத்மா நற்கதியடைய எல்லாம் வல்ல மயிலணி முருகப் பெருமானையும், சுன்னாகம் தாழையடி குல தெய்வம் அரிகர புத்திர ஐயனாரையும், மஹாமாரி அம்பாளையும் போற்றிப் பணிவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவஸ்ரீ ச. சண்முகானந்தக் குருக்கள்**
**கந்தசாமி கோவிலடி,**
**மயிலணி, சுன்னாகம்.**

**சமரசம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் இவையே மனித சமுதாயத்தில் இணக்கத்தை ஏற்படுத்த முடியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஸ்ரீரஸ்த்து



சிவப்பிரம்மஸ்ரீ
கணேச சபாபதிசர்மா
(குருக்கள்)
"ஸ்ரீ வாகீச வாரிதி"
சுன்னாகம்

Sivabramasri
Kanesa Sabapathy Sarma
(Kurukkal)
Sri Vakeesa Varithy
Chunnakam.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலியும்

மானிடப் பிறப்பு, இறப்பு, வாழ்வியல் வட்டம், இறப்பின் பின் மக்களால் மறக்கப்பட்டு விடாமல் இருப்பது அவரவர் வாழ்வியலில் அவர் செய்த நற் பணிகளே.

அந்த வகையில் அமரர் பெரியதம்பி ஜெயந்தன் (ஸ்ரீ) அவர்கள் தாளையடி ஐயனார் பூசகர் பரம்பரையில் உதித்து சந்திரசேகரப் பிள்ளையாருக்கு அரும்பணிகள் ஆற்றித் தொடர்ந்து வருஷப்புலம் மகாமாரி அம்மன் கோயிலிலும் அரும்பணிகளாற்றியவர். அன்னதான, திருமண மண்டபத்தின் உருவாக்கத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றியவர். மேலும் நாம் வருஷப்புலத்தில் நித்திய நைமித்திய பூசை நடாத்திய காலத்தில் பரிசாரகராக உதவியும், நைவேத்திய ஆக்கம் போன்ற உதவிகளினால் பூஜைகள் சிறப்பாக நடைபெற ஆக்கமும் ஊக்கமும் தந்த அன்பாளர்.

ஆத்ம திருப்திக்காக தன்னாலான சேவை செய்து மகிழ்ந்தவர். அவர்களை இவ்வுலகம் என்றும் அறிவதில்லை.

மானிட வாழ்வின் நியதியிலிருந்து எவருக்குமே விதிவிலக்கில்லை. என்பதை உணர்ந்து அவரை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கும், சுற்றத்தவர் களுக்கும் ஆறுதல் கூறுவதைத் தவிர வேறு யாது செய்யலாம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா எம்பெருமானின் திருவடி நிழலில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்



# மயிலணி கந்தசாமி கோயில்
# MYLANY KANDASAMY KOVIL

## அஞ்சலியுரை

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றுக்கிணங்க பிறந்தவர்களெல்லாம் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும் என்பது நியதி. இதற்கு ஒருவரும் விதி விலக்கல்லர்.

இதற்கிணங்க சுன்னாகம் தாளையடி ஐயனார் கோவிலடியைப் பிறப்பிட மாகவும், வருஷப்புல அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி ஜெயந்தன் (ஸ்ரீ) அவர்களும் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார்.

வாழும் காலத்தில் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்காமல் அறநெறியில் வாழ்வதே மனிதப் பண்பாடு. இம் மனிதப் பண்பை அடியொற்றி வாழ்ந்தவர் அமரர் ஜெயந்தன். அவரது பிரிவுச் செய்தி அறிந்த நேரத்தில் இருந்து மிகுந்த மனத் துயரம் அடைந்தேன். இவ்வளவு விரைவாக இறைவனடி சேர்வார் என எதிர்பார்க்க வில்லை.

அவரது பிரிவால் துயருற்று இருக்கும் உறவினர்களுக்கும் குடும்பத்தவர் களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், அமரர் ஜெயந்தனின் ஆத்மா மயிலணி முருகப் பெருமானின் காலடியில் சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"ஸர்வே ஜனகா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ வ. உமாசுதக் குருக்கள்**
பிரதமகுரு
மயிலணி கந்தசாமி கோயில்
சுன்னாகம்.

> சிக்கனமும், சிந்தனையும், சீர்திருத்தமும்,
> பேராசை ஒழித்த நிறை மனமும் சேரும்போது அமைதி நிலவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**பிரபலஇன்னிசைச் சொற்பொழிவாளர்**



சிவானந்தவாரிதி, சைவமாமணி, இசைஞானதிலகம், வாரியார்வாரிசு, அருள்ஞானவித்தகர், சித்தாந்தவித்தகர், செந்தமிழரசு, அருள்மொழியரசு, வண்டமிழ்வேந்தன், தத்துவமுத்து, சைவத்தமிழிசைவாரிதி, அருளமுதச்சொல்வாரி, வியாசானுக்கிரகவாசகமாமணி, செந்தமிழ்ச்சுரபி, சைவாசாரியசிகாமணி.

*சிவத்திரு.வ.குமாரசுவாமி ஐயர்*

**"SIVANANDAVARUTHI"**

**SIVATHTHIRU.V.CUMARASAAMI IYER**

Mylani,Chunnakam,
Sri Lanka

மயிலணி,சுன்னாகம்,
இலங்கை.

# எமது ஆற்றொணாத் துயரலைகளும் பிரார்த்தனை உரைகளும்

## சீலமிகு பக்திநிறை செம்மையாளன்

எமது பேரன்புக்கும் ஆசிக்கும் உரிய உடன்பிறவாச் சோதரன் அமரர் பெரியதம்பி ஜெயந்தன் (ஸ்ரீ) அவர்கள் இறைபதமடைந்த செய்தியைச் செவியுற்று, பெரும் மனத்துயரும், அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். ஏறத்தாள இருபது ஆண்டுகளுக்கு மேலாக அமரர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. இக்காலங்களில் அவரின் உயரிய பண்பாடுகள் எமது நெஞ்சகத்தை விட்டகலாப் பதிவேடுகளாகப் பதிந்துள்ளன. இப்பாரினில் உயர் மானுடர் ஒருவருக்குரிய அன்பு, கருணை, இரக்கம், பக்தி, விடாமுயற்சி, சகோதரத்துவம், தன்னலமற்ற சேவை, தற்புகழ்ச்சியை விரும்பாமை, இறைபணியில் முன்னிற்றல், இல்லறக் கடமைகளில் உறுதி, பெரியோர், குருமாரை மதித்தல் போன்ற சிறந்த நற்குணவியல்புகள் ஒருங்கே வாய்க்கப்பெற்ற உத்தமசீலர் ஆவார்.

அமரர் அவர்கள் சுன்னாகம் நகரில் அமைந்துள்ள புராதன ஆலயமாக விளங்கும் தாளையடி ஸ்ரீ ஹரிஹரசுத ஐயனார் ஆதீனகர்த்தா பரம்பரையில் வந்துதித்து, அவ்வாலயக் கைங்கரியங்களில் ஈடுபட்ட பெருமைக்குரியவர். அத்துடன் தான் மணம் புரிந்த கிராமமாகிய வருஷப்புலத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத் திருப்பணிச் சபையில் அருந் தொண்டனாக விளங்கி அவ்வாலய அன்னதான, திருமண மண்டபம் சிறப்புற அமைய அயராதுழைத்தார். ஆலயக் கிரியைகள் யாவும் ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெற வேண்டும் என்பதிலும், ஆலயப் பூஜைக் கைங்கரியங் களுக்குப் பயன்படுத்தப்படும் திரவியங்கள் யாவும் புனிதத் தன்மையுடனும், சிறந்த தரத்துடன் இருக்க வேண்டும் என்பதிலும் மிகவும் கண்டிப்பாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளார். பல சிவாச்சாரியர்கள் இவரின் இச்சிறந்த பண்பு பற்றி எம்முடன் சம்பாஷித்து அவரைப் போற்றியுள்ளார்கள்.

நாம் இடம்பெயர்ந்து சுன்னாக நகரை வந்தடைந்த காலத்தில் சிவப் பொலிவும், சைவப் பண்புகளும் கொண்ட இவரது உத்தம அன்னையாரும், சகோரரும் எம்மை ஐயனார் கோவிலடியில் வரவேற்று ஆதரித்து இல்லிடம் நல்கி ஆதரித்தமையை எம் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத நிகழ்வாக எம் மனதில் படிந்துள்ளது.

அமரர் அவர்கள் எமது இன்னிசைச் சொற்பொழிவுகளைக் கேட்டு கண்ணீர் மல்க மெய்மறந்தின்புற்று எம்மில் மிகுந்த பக்தியும் மதிப்பும் கொண்டவராக விளங்கினார்.

தமது இல்லற வாழ்வில் தமக்கு விதிக்கப்பட்ட இல்லறக் கடமைகளையும், தமது ஆயுட்காலத்தில் இறைவனால் விதிக்கப்பட்ட சமயப் பணிகளையும் செவ்வனே நிறைவு செய்த அமரர் அவர்கள் இன்று ஸ்ரீ ஹரிஹரசுத ஐயனாரின் திருவடித் தாமரைகளை ஸ்ரீ மகாமாரி அம்பாளின் பெருங்கருணை கைகூடி கழல் அடைந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்று வானுறையும் தெய்வமாகிவிட்டார்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

அமரர் அவர்களின் ஆத்மா சாந்திபெற்று நிறைவடையவும், அவரின் பிரிவால் மனத்துயருற்றிருக்கும் அன்புத் துணைவியாரின் மனத்துயர் மாறவும், அன்புச் சகோதரர், பெறாமக்கள், மைத்துனர், மைத்துனிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மனச்சாந்தியடையவும், எமது குருநாதன் செல்வச் சந்நிதி வேலவனையும். எம் தாயாக விளங்கும் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பிகையையும் உளமுருகப் பிரார்த்திப்போமாக.

**சிவத்திரு. வ. குமாரசாமி ஐயா**

**எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டு விடலாம். காலம் இதற்கு உதவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

T.P No : 021 - 3213151

பதிவிலக்கம்:- HA/5/JA/193

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com

Fax:- 021 2241909

திகதி: 09/02/2021


## பிரார்த்தனையுரை

மனித வாழ்வு மகத்தானது. பிறப்பவர்கள் யாவரும் இறப்பைச் சந்திப்பது நியதி. எனினும் வாழ்நாளில் நாம் அன்பாகப் பண்பாக வாழ்ந்து பலருக்கும் பயனுடைய மனிதராக வாழ்வதே உன்னதம். சுன்னாகம் ஐயனார் ஆலயப் பரம்பரை அறங்காவலர் குடும்பத்திலுதித்து ஆன்மீகப் பணியையும், சமூகப் பணியையும் ஆற்றி சமீபத்தில் காலமான திரு. பெரியதம்பி ஜெயந்தன் அவர்களை யான் நன்கு அறிவேன்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் கவலையடைகின்றேன். சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை வளர்ச்சியில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டவர். ஐயனார் மீது மிகவும் பக்தி மிக்கவர். என் செய்வது? நியதியை யார் வெல்வர். அன்னாரின் ஆத்மா சாந்திபெறத் துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

சுபம்

**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

**காலம் தாழ்த்தாமல் கடமையைச் செய்**
**இல்லையேல் காலம் உன்னைத் தாழ்த்தி விடும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிரார்த்தனையுரை

அமரர் பெரியதம்பி ஜெயந்தன் (ஸ்ரீ) அவர்கள் வரிஷப்புலத்தில் வாழுங் காலத்தில் பல சமய சமூக சேவைகளை மேற்கொண்டவராவார். அன்னாரது திடீர் மறைவானது ஈடு இணை செய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும்.

ஜெயந்தன் அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னார ஆன்மா மகாமாரியம்மன் திருவடியில் இளைப்பாற பிரார்த்தனை செய்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவஸ்ரீ வை. திருகுமார சர்மா**
ஆலய பிரதமகுரு
மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
வரிஷப்புலம்,
சுன்னாகம்.

மற்றவர்கள் முடியாது என்று நினைக்கிற ஒரு விடயத்தை முடித்துக் காட்டுவதுதான் நல்ல தலைமைப் பண்பின் அடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறியின் நினைவாக...

அன்பும், திறந்த உள்ளமும், பண்பு மிக்க பேச்சும், சுறுசுறுப்பான நடையும், சொன்னதை உடனே செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றலும், சேர்ந்தோரை தம்பால் ஈர்க்கும் திறன் ஒருங்கே அமையப் பெற்றவர் "சிறி" எனப்படும் அமரர் பெரியதம்பி ஜெயந்தன்.

சிறு பராயத்தில் இருந்தே நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருந்தது. இதனால் இவர் என்னை சிறு வயது முதல் இறுதி வரை "சித்தப்பா" என்றே அழைத்தார். எனக்கு தேவையான சிறிய உதவிகளைக்கூட இறுதிவரை (நோயுள்ள காலங் களில் கூட) செய்து வந்தார். மேலும் எம் வீட்டு செல்லப்பிராணி கூட அவர் மீது நன்றியுணர்வுடன் இருக்கின்றது. அவரும் செல்லப் பிராணிகள் மீது அளவு கடந்த அன்பைக் கொண்டிருந்தார். சிறிது காலங்களிற்கு முன்பு எனது செல்லப்பிராணி நோய்வாய்ப்பட்டு காணப்பட்டது. சிறி தனது நோயைக்கூட பொருட்படுத்தாமல் எனது செல்லப்பிராணியை மிருக வைத்தியரிடம் கொண்டு சென்றார். இதுவும் அன்னாரின் உயரிய குணத்தை எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தில் தன்னையே முழுமையாக ஈடுபடுத்தி அளப்பரிய தொண்டாற்றினார். அவர் ஆலயத்தில் தொண்டாற்றிய வேளையில் ஆலயமானது சுத்தமாகவும், பூசைப் பொருட்கள் பிரகாசமாகவும், ஆலய உபகரணங்கள் மிகவும் நேர்த்தியாகவும் ஆலயமே பொலிவுற்று தெய்வீக சூழலில் காணப்பட்டமை யாவரும் அறிந்ததே. இவரின் நினைவலைகள் என்றுமே அம்பாளின் ஆலயச்சூழலில் நிலைத்திருக்கும் என்பது உறுதி. சிறியின் உழைப்பினதும், விடாமுயற்சியினதும், அர்ப்பணிப்பினதும் செயல் வடிவமாக காணப்படுவது அம்பாளின் அன்னதான மண்டபம் என்றே கூறவேண்டும். தன்னை ஈடுபடுத்தி பற்பல தொண்டுகளை அம்பாளிற்காகவும், அம்பாளின் அடியவர் களுக்காகவும் செய்தார். இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகி விட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கதிரவேலு கருணைநாயகம்**
கருணன் கல்வி நிலைய இயக்குனர்,
முன்னாள் உறுப்பினர்
வலிதெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றுதற்குரிய செயல் வீரன்...

"மக்கள் சேவையே இறை சேவை" என்பதை உணர்ந்து ஊருக்காக உழைத்தவர் அமரர் பெரியதம்பி ஜெயந்தன் (சிறி) என்பது மிகையாகாது. சம காலத்தில் வருஷப்புலத்தில் அருகருகே வசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

நான் பார்த்தளவில் சிறி மற்றவர்களிற்கு உதவ வேண்டும் என்பதிலும், கோவில் கைங்கரியங்கள் செவ்வனே நடைபெற வேண்டும் என்பதிலும் திடமாக இருந்தார். நான் அன்னதான மண்டப திருப்பணிச் சபையின் தலைவராக இருந்த வேளை சிறி தன்னையே அர்ப்பணித்து இரவு பகல் பாராது மண்டபமானது பூரணமடைய வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டார் என்பது உண்மை. அதை இங்கு பதிவு செய்வதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

அன்னாரின் சேவையைப் போல் ஊரிற்கும் ஆலயத்திற்கும் இனி எவராலும் செய்யவே இயலாது. அன்னாரின் சேவை போற்றுதற்குரியது.

இவரது ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ மகாமாரி அம்மனைப் பிரார்த்திக் கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நா. யோகராஜா**
முந்நாள் தலைவர்,
ஸ்ரீ மகாமாரி அம்மன் திருமண (அன்னதான)
மண்டபத் திருப்பணிச் சபை.
(Vinyl's Institute நிர்வாகி)

**நீங்கள் எப்பொழுதும் உங்கள் இலக்கை நோக்கி வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருப்பதாகவும் இறைவன் உங்கள் பக்கத்தில் துணையாக இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.**

*- சுவாமி விவேகானந்தர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளப்பரிய சேவையாளன்...

உலகிலே பிறப்பவர்கள் எல்லோருமே எப்போதோ
இவ் உலக வாழ்வை நிறைவு செய்ய வேண்டியதே
இறைவனின் நியதி ஆனாலும் சிலரது வாழ்வையும்
செயலையும் மறக்க முடியாது.

வாழ்வது சில காலமாயினும் மண்ணுக்கு நல்லவை செய்தவர்களை நாம் நினைத்துக் கொள்ள வேண்டும். சுன்னாகம் என்றதும் நினைவுக்கு வருவது ஐயனார் கோயில். அந்தக் கோயிலின் ஆதீனகர்த்தாக்களில் ஒருவரான பெரியதம்பி அவர்களின் இளைய புத்திரனே அமரர் ஜெயந்தன் (ஸ்ரீ) அவர்கள்.

ஜெயந்தன் திருமணமாகி புகுந்த இடமே வரிஷப்புலம். வரிஷப்புலத்தின் இரு கண்களே சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயமும், வரிஷப்புலம் மகாமாரி அம்பாள் தேவஸ்தானமுமாகும். இந்த இரண்டு இடங்களோடும் தொடர்பு பட்டவர் ஜெயந்தன் அவர்கள். ஏற்கனவே அவருக்கு இயல்பாக இருந்த கோயில் தொடர்பு காரணமாக மகாமாரி அம்பாள் தேவஸ்தானத்திலும் அவரது ஈடுபாடு அதிகமாக இருந்தது.

அதேபோல் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் பவள விழாக் காலத்தில் அவரது ஒத்துழைப்பு மிகுதியாக இருந்தது. எந்த வேலையையும் பக்குவத்துடன் செய்கின்ற பாங்கு அவருக்கே உரியது. இப்படித்தான் செய்ய வேண்டும் என்று கேட்க மாட்டார். மாறாக இப்படியும் செய்யலாம் என்பார். அவர் கேட்கின்ற முறையிலேயே அதனை அவ்வண்ணம் செய்யலாம் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படும். திருஞானசம்பந்தர் வித்தியாசாலை நிகழ்வு என்றால் அயலில் உள்ளவர்கள் எல்லோருமே தமது வீட்டு நிகழ்வு போலச் செயற்படுவார்கள். அதே போலவே அமரர் ஜெயந்தன் அவர்களும் பாடசாலை நிகழ்வில் செயற்பட்டது இப்போதும் எம் மனதில் நிழலாகத் தோன்றுகின்றது. அவர் பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் என்றுமே மறக்க முடியாதவை.

அன்னாரது ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக் கொள்வோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தம்பிஐயா வாமதேவன்**
**அதிபர்**
**யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி**
**தெல்லிப்பழை.**
**முன்னாள் ஆசிரியர்,**
**திருஞான சம்பந்தர் வித்தியாசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You went out of the way to help everyone
you were always the great one.

I hope someday we will meet again
So, I can tell you that you were a great man .

I hope He is treating you right up there

I will always be right here.

One day we will meet again
I will just have to wait till then

I miss you

Hopefully I will make it through.

**S. Sarumathy** Mse (IT)

எப்பொழுதும் உங்கள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். எப்போதும் நம்பிக்கையோடும், எல்லோரிடத்திலும் நட்போடும் இருங்கள். எப்போதும் கற்றுக்கொண்டும் வளர்த்துக் கொண்டும் உங்களை முன்னேற்றிக் கொண்டும் இருங்கள்.

*- சுவாமி விவேகானந்தர் -*

மனித மனம்தான் மனித வாழ்க்கையின் விளை நிலம்
மனத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனுடைய தன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகத் தொண்டன் பெரியதம்பி ஜெயந்தன்

அன்று, ஞாயிற்றுக்கிழமை; மதியம் 12.30 மணியளவில் தொலைபேசி வாயிலாக அறிந்த செய்தி என்னை ஒரு கணம் திகைக்க வைத்தது. காலனுக்கு ஏன் இவ்வளவு அவசரம்? அம்பாள் தனக்குத் தேவையென அழைத்துவிட்டாள் போலும் என நினைத்து ஆறுதல் அடைந்தேன். எனக்கும், அவருக்குமிடையே ஏற்பட்ட நட்பைச் சிந்தித்துப் பார்க்கிறேன்.

2005ஆம் ஆண்டு வரியப்புலம் மகாமாரி அம்பாளின் மகோற்சவம் நிறைவு பெற்று, சில தினங்களின் பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நான் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். வேலைப்பழுவுக்கு மத்தியிலும் நிர்வாக சபையினரதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்புடன் எனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தேன். ஆனாலும் இவ்விடத்திலுள்ள பலரை எனக்குத் தெரியாது.

ஒருநாள், ஆலயச் சூழலில் சுந்தரலிங்கம் சசிக்குமார் என்பவரால் ஒருவர் அறிமுகப்படுத்தப்பட்டார். அவருக்கு என்னைத் தெரியாது. எனக்கும் அவர் முன்பின் தெரியாத ஒருவர். ஐயனார் கோயில் பூசகர் குடும்பத்தைச் சார்ந்தவர் என்றும், முன்னைய காலங்களில் ஆலயத்துடன் தொடர்புபட்டவர் என்றும் அறிந்தேன். அவர்தான், சிறீயண்ணை என அழைக்கப்படும் பெரியதம்பி ஜெயந்தன். முதலில் ஆலயம் சார்ந்த விடயங்களில் எங்களிடையே ஏற்பட்ட பிணைப்பானது பிற்காலத்தில் எமது குடும்பத்தில் ஒருவராக, உடன்பிறவாச் சகோதரனாக இறுதிக்காலம் வரைக்கும் நிலைத்திருந்தது. இது யாவரும் அறிந்ததே.

பொருளாதாரத் தடைகள், உள்நாட்டு யுத்தங்கள் போன்ற பாதகமான நிலைமைகள் காணப்பட்ட அக்காலத்தில் சக உறுப்பினர்களுடன் சேர்ந்து நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுவதற்குப் பேருதவி புரிந்தார். ஆலயம், ஆலயச்சூழல், ஆலயச் சொத்துக்கள் அனைத்துமே சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் ஏன்பதில் மிகுந்த அக்கறையுடனும், கண்டிப்புடனும் செயற்பட்டார். மற்றையவர்கள் செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் செயற்படாது, தனது உடலை வருத்தி செய்த சேவைகள் பலவாகும். ஆலயத்தில் தெய்வீக இசை கேட்க வேண்டும், தெய்வீக மணம் கமழ வேண்டும் என்ற சிந்தனையைச் செயல்வடிவமாக்கினார். "நேரம் தவறாமை" என்பது இவரது வாழ்க்கையில் சிறந்த விழுமியமாகக் காணப்பட்டது. ஆலயப் பூசைகள் நேரந் தவறாமல் நடக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் செயற்பட்டார். ஆலயச் சூழலில் பிறந்து, வளர்ந்ததால் ஏற்பட்ட அனுபவம் காரணமாக அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த சேவைகள் மற்றையவர்களிடம் இருந்து அவரை வேறுபடுத்திக் காட்டியதில் வியப்பேதுமில்லை. ஆலயம் சார்ந்த விடயங்களில் அவர் செய்த சேவைகளைப் பலரும் இன்று நினைத்துப் பார்க்கிறார்கள். மற்றையவர்களுடன் வெளிப்படையாகப் பேசிக்கொண்டும் இருக்கிறார்கள்.

ஆலய அன்னதான மண்டபத் திருப்பணிகள் பற்றி விடயங்களையும் இவ்விடத்தில் கூறவேண்டிய நிலைக்குக் கடமைப்பட்டுள்ளேன். என்னுடனும், என் சார்ந்தவர்களுடனும் அடிக்கடி கதைப்பது "ஆலயத்திற்கு ஒரு அன்னதான மண்டபம் அமைக்க வேண்டும்" என்பதேயாகும். மகோற்சவ காலங்களில் உள்வீதியில் அன்னதானம் வழங்குவது மாலை நேரப் பூசைக்கு இடையூறாக இருப்பதை உணர்ந்து சிந்தித்ததன் செயல்வடிவமாக உருவாக்கப்பட்டதே அன்னதான மண்டபம். 2008ஆம் ஆண்டு தை மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் ஆரம்பிப்பதற்கு முதற்காரணமாகவும், மூல காரணமாகவும் இருந்தவர் சிறீயண்ணை.

இக்காலகட்டம் பொருளாதாரத் தடைகள் நிலவிய காலம். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலை. உள்ளூர், வெளியூர் அன்பர்களின் நிதி உதவியினாலும், இளைஞர்களின் சிரமதானப் பணியினாலும் மண்டப வேலைகள் நடைபெற்றன. இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்குத் தேவையான உணவுகளைப் பரிமாறி முழுமூச்சுடன் செயற்பட்டார். நான் காலை நேரம் கடமைக்குச் சென்றுவிட்டு மாலை நேரம் திரும்பி வந்து பார்க்கும்போது, பல சந்தர்ப்பங்களில் வியப்படைவதுண்டு. ஏனெனில் மண்டபம் புதிய தோற்றத்தில் காட்சியளிக்கும். மிகவும் நேர்த்தியாகவும், நுட்பமாகவும் வேலைகளை நகர்த்திச் சென்றார். தனது உடலில் நோய் இருப்பதனை மறந்து ஆலயம் வளர்ச்சி பெற வேண்டும் என்பதிலே மிகுந்த ஆர்வம் உடையவராகச் செயற்பட்டார். பொதுமக்களின் பாவனைக்காக மண்டபத்தை கையளிக்க வேண்டும் என்ற பெருவிருப்புடன் 2012ஆம் ஆண்டு தனது சொந்தப் பணத்தையும் செலவழித்து மண்டப வேலைகளைப் பூர்த்தி செய்தார். மண்டபத்தில் இவருடைய காலத்தில் பல திருமண நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன; விரிவுரையாளர்களால் மனவளக்கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

ஆலய நிகழ்வுகள் மட்டுமன்றி யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் நடைபெற்ற பவளவிழா, பவளவிழா மலர் வெளியீட்டு விழா, சிவபாக்கியம் கலையரங்கத் திறப்புவிழா போன்ற நிகழ்வுகள் சிறப்பாக நடை பெறுவதற்கும் எனக்குப் பல வழிகளில் பேருதவி புரிந்தார்.

ஆலய நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்களும், சிலரின் பொய்ப் பிரச்சாரங் களும், நடத்தைகளும் அவரை மட்டுமன்றி எம்மையும் மன வேதனைப்படுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காய்த்த மரத்திற்குத் தான் கல் எறி விழும்" என்பது பழமொழி. "இறைவனை வணங்குவதைவிட சிந்திப்பதே மேல்" என்பார்கள். இவர் ஆலயத்திற்கு வருகை தராவிட்டாலும் சிந்தனை முழுவதும் அம்பாளைப் பற்றியதாகவே இருந்தது. அதனால்தான் போலும் நோயிலிருந்து வருந்தாமல் தன்னிடம் விரைவாக அழைத்துவிட்டாள் அன்னை.

"காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தில் மானப் பெரிது"

என்பது வள்ளுவர் கருத்து. அம்பாளுக்கு எக்காலத்தில் என்ன தேவையோ, அக்காலத்தில் அதனை நிறைவு செய்து மனநிறைவு கண்ட ஆன்மீகவாதி சிறீயண்ணை என்று சொல்வதில் நான் பெருமிதமடைகின்றேன்.

அவர் ஆத்மா தாழையடி ஐயனார், மகாமாரியம்மன் திருவடிகளைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றேன்.

**ந. பழனிவேல்**
குருநாதர் கோவிலடி,
தெல்லிப்பழை

**வெற்றி வேண்டுமானால், இடைவிடாத முயற்சியும் தீவிர சங்கல்பமும் உங்களிடம் வேண்டும்.**

**தன்னம்பிக்கையை இழக்கின்ற அக்கணமே ஒருவன் அழிகிறான். நாடும் அவ்வாறே.**

**உன்னை நம்பு ; எல்லா ஆற்றலும் உன்னிடமே உள்ளது.**

- சுவாமி விவேகானந்தர் -

**ஆறாவது அறிவின் கூர்மைதான் சிந்தனை!**
**சிந்தனைதான் அறியாமையை அகற்றி அறிவை முழுமையாக்க வல்லது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான நிர்வாகசபை,
மற்றும் அன்னதான, கல்யாண மண்டப சபையினருடன்
அமரர் பெரியதம்பி ஜெயந்தன் அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு சித்தப்பா...

வாழ்க்கை யென்பது
இவ்வாறு தான் இருக்குமென
நிஜவாழ்வில் வாழ்ந்து காட்டி
ஆன்மீகப் பற்றும்
சமூக சிந்தனையும் கொண்டு
தன்னலம் பாராது வாழ்ந்தீரே - எம்மையும்
உம் பிள்ளைகள் போல்
அன்புடன் பாசம் காட்டி அரவணைத்தீரே.

உற்றார் உறவுகளுடன்
இனிதே வாழ்ந்து
எவ்வேலை என்றாலும்
சிரமம் பாராமல்
செய்து முடிக்கும்
வல்லமை கொண்டீர்
நமக்கெல்லாம் உறுதுணையாக
இருந்துவிட்டு
திடீரென நம்மைப் பிரிந்து
சென்று விட்ட
உங்களைப் பிரிந்து
துயரால் வாடுகின்றோம்.

அன்பு மறவாத பெறாமக்கள்
**ஸ்ரீபிரியதர்சினி**
**சுஜீவன்**

சிறந்த குணத்தை உருவாக்கும், மனவலிமையை வளர்க்கும், அறிவை விரியச் செய்யும் ஒருவனைச் சொந்தக் காலில் நிற்கச் செய்யும் கல்வியே தேவை.

*- சுவாமி விவேகானந்தர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் உள்ளத்திலிருந்து...

பாசமிகு சித்தப்பாவே
பண்பு நிறைந்த சித்தப்பாவே
சித்தப்பா என்று
நாம் இனி யாரை அழைப்பது
வாழ்வுதனை முடித்து
நீண்ட தூரம் சென்றதேனோ?
ஒப்பற்ற பாசத்தைக் காட்டி
வெகுதூரம் சென்றதேனோ?
பெறாமக்கள் என்று எமை நினைக்காமல்
பிள்ளைகளாய் நினைத்தீரே!
அன்புடன் எமை அணைத்து
அன்பினை சொரிந்த சித்தப்பாவே
பாதியிலே எம்மை விட்டு
பிரிந்து போனது ஏன்?
இனிய யாரை நாங்கள்
சித்தப்பா என்று கூறுவது
உங்களைப் போல்
யாருமில்லை இவ்வுலகில்
சித்தப்பா என்று உங்களை
அழைக்க வருவீரா எம்முன்னே.

என்றும் நினைவுகளுடன்
கஸ்தூரி, விதுசன்
லவகுசன், ஹார்த்திக்
அபிரா
டர்சிகன்

எண்ணெய் இல்லாதுபோனால் விளக்கு எரியாது அதுபோல் இறைவன் இன்றி மனிதனால் வாழமுடியாது. பந்தப்பட்ட ஆன்மாவே மனிதன். மாயை என்னும் சங்கிலியால் கட்டுப்படாத ஆன்மாவே இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மாமாவே நீ வருவாயா?

காலையிலே செய்தி கேட்டோம்
கதறி அழுகின்றோம்
ஆலையில்லா கரும்பானோம்
ஐயோ நாம் என்ன செய்வோம்.

ஆருயிர் மாமாவே
கனக்குது நம் இதயம்
எண்ணம் கொதிக்குது
இனி நாம் என்ன செய்வோம்
நாளை விடியும் நீங்கள்
நலன் பெறுவீர்கள் என்றிருந்தோம்
பொல்லாத நாளும் வந்ததுவே
எங்களின் நம்பிக்கையும் பொய்த்ததுவே
இத்தனை நாள் உனக்காக இறைவனிடம்
கேட்டதெல்லாம்
அத்தனையும் வீண் தானே
எமை அழவிட்டு சென்றீர்களே.

மாமாவாய் முதல் உறவாக
இருந்த உம்மை
நான்காண்டு காலம் பாழும் நோய்
வாட்டியதோ?
உடல் நோயால் நீர் வருந்த
உளம் நொந்து நாம் துடித்தோம்
உள்ளுக்குள் அழுது வெளியே
சிரித்து நின்றோம்
இனிமேல் அழுவதற்கு எம் கண்ணில்
நீரில்லை
அழுதாலும் துடைப்பதற்கு ஆசைமாமா
நீங்கள் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவாகி காயாகி கனியாகி
இருந்த உம்மை புயலொன்று
வந்து அடியோடு சாய்த்ததுவோ?
நோயின் வலி பொறுத்தாய்
உறவும் சுற்றமும் உளம் புரிந்து
அழுகின்றோம் அழுகின்றோம்
ஆறவழி தெரியவில்லை
தொழுதும் பயனில்லை
சென்று விட்டார் என்கின்றனர்
இதயம் அதை ஏற்கவில்லை
ஈசன் கழலடியில் ஆத்மா
சாந்திபெற இறைதாள்
இறைஞ்சி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மருமகன்**
**நிசந்தன் குடும்பம்**

தில்லைகட்டி, சுன்னாகம்.

**உன்னிடம் உள்ள பணம் எப்போது வேண்டுமானாலும் அழிந்துவிடும். ஆனால் நீ செய்த கைங்கரியங்கள், தான தர்மங்கள் நீ இறந்தாலும் உன் பெயர் சொல்லும்.**

**உன்னைப் படைத்த இறைவனுக்கு மட்டும் பயந்து வாழ்ந்துபார், எந்த மனிதன் முன்பும் தலை குனிய வேண்டிய சூழ்நிலை வராது. - கீதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் மனக்குமுறல்....

பண்புக்கு இலக்கணமாய் இருந்து
பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்து
கடமையில் கண்ணியமாய் வாழ்ந்தீரே
அன்பின் சிகரமாய் இருந்து
யாவர்க்கும் நன்மைகள் புரிந்து - ஆலயத்
தொண்டுகளும் புரிந்து வாழ்ந்தீரே - ஐயன்
உமை அழைத் தானோ - விரைவாக மண்ணுலகை
நீத்து விண்ணுலகு சென்றீரே
உம்பிரிவால் கதறியழும் உறவுகளிற்கு
ஆறுதல் கூற வார்த்தைகளேயில்லை.
நீங்கள் வாழ்ந்த காலத்தில் மருமக்களான எம்மீது
அன்புகாட்டி "கொடுப்பதில் தான் மகிழ்ச்சி
பெறுவதில் அன்று" என்ற மரபுக்கேற்ப வாழ்ந்தும்
"தொட்டணைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றணைத்து ஊறும் அறிவு" என்ற குறட் பாவிற்கு ஏற்ப
பாரினில் சிறந்து விளங்கிய நீங்கள் எமக்கு எடுத்துக்
காட்டாக வாழ்ந்து விண்ணுலகம் சென்று விட்டீரே - மாமா
உமை நினைத்து நாம் இங்கு புலம்புகிறோம்.

உங்கள் நினைவுகளுடன்
மயூரன்
நிரூஷியா

அனுபவம் என்பது ஒரு புதுவிதமான ஆசிரியர்.
அது பாடங்களை கற்றறிந்த பின் தேர்வுகளை வைப்பதில்லை.
தேர்வின் மூலம் தான் பாடங்களைக் கற்றுத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா உங்கள் நினைவில் வாழும் நாம்...

காத்திருக்கின்றோம்
சிறி மாமாவின் ஓட்டோ வருமென்று
கிடைத்தது
சிறி மாமாவின் செய்தி
தைத் திருநாளன்று ஐந்து மணிநேரம்
கதைத்தது, பேசியது
கனவாகி விட்டது அன்று

கல்வி தொடர
கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கிட
காத்திருக்கிறோம் ஓட்டோவை
ஆனால்
சிறி மாமா....

உடல் உளம் காத்திட
கூறிய புத்திமதிகள்
என்றும் எம் காதுகளில்
ஆனால்
சிறி மாமா...

ஆத்தை Auntyயை தனியே விட்டு
நீண்ட தூரம் சென்றது
சதியோ விதியோ
யாமறியோம்.....
நீங்கள் இன்றில்லையே என்பது
நெருப்பாகச் சுடுகிறது

என்றும்
உம் நினைவால்
பிரியாதிருக்கும் மருமக்கள்

**கோபி, கபில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஐயனார் வழிபாடும்

## சுன்னாகம் தாளையம்பதி ஐயனார் குரு பரம்பரையில் வழிவந்த அமரர் பெரியதம்பி ஜெயந்தனும்

ஐயனார் வழிபாடு இலங்கையிலே இந்துக்கள் மத்தியில் மட்டுமன்றிப் பௌத்த மக்கள் மத்தியிலும் பரவியிருக்கின்றது. இரு பகுதியினரிடையேயும் குறிப்பாக விவசாய வாழ்வினர் அத்தெய்வத்தை வழிபடுகின்றனர். ஐயனாருக்கு அரிகரகுமரன், அரிகரபுத்திரன், வனரட்சகன், மாசாத்தன், வெண்பாயுதன் முதலிய நாமங்கள் வழங்கப்படுகின்றன. சிங்கள மக்கள் அத்தெய்வத்தை "ஐயநாயக்க" என்றும் ஹரிகரபுத்ர என்றும் அழைப்பர்.

இந்துக்களின் நம்பிக்கைப்படி அவர் வளைசெண்டு ஆயுதத்தையும் கோழிக்கொடியையும் உடையவர். யானையும் குதிரையும் அவரது வாகனங்கள். அவருடைய மனைவியர் பூர்ணாவும் புஷ்களாவுமாவர். இவர் இந்திரனுடைய வேண்டுகோளுக்கிணங்க மாகாளனை ஏவிச் சூரபதுமனது தங்கையாகிய ஆட்டுமுகத்தையுடைய அசமுகி என்ற அசுரப் பெண்ணுடைய கைகளை வெட்டி, இந்திரன் மனைவியாகிய இந்திராணியைக் காப்பாற்றியவர் என்பது கந்தபுராணக் கதையாகும்.

ஐயனார், திருமாலுக்கும் சிவனுக்கும் பிறந்த பிள்ளையாகையால் "அரிகர புத்திரர்" எனப்பட்டார். அப்பிறப்புப் பற்றிய கதை சுவையானதாகும். பாஸ்மாசுரன் என்ற பொல்லாத அசுரனுக்குத் தொட்டதையெல்லாம் சுட்டுச் சாம்பலாக்க வல்ல சக்தியைச் சிவன் வரமாக அளித்தார். வரம் கொண்ட அசுரன் சிவனையே தொட எத்தனித்த போது ஓட்டம் பிடித்தார். சிவனைக் காப்பாற்றக் கருதிய திருமால் மோகினி வேடங்கொண்ட பஸ்மாசுரனைக் கவர்ந்து வசமிழக்கச் செய்தார். மோகினியிடம் இச்சை கொண்ட அசுரன், அவள் எண்ணெய் தேய்த்து நீராடி வரும்படி வேண்டியதற்கிணங்கித் தன்னுடம்பில் எண்ணெய் தேய்க்க முயன்றபோது எரிந்து சாம்பலானான். மோகினியின் வசீகரத்தாற் சிவன் கவரப்பட்டுக் கூடிய கூட்டத்தால் ஐயனார் தோன்றினார்.

கர்வங்கொண்ட தாருகாவனரிசிகள் ஞானபக்தி மார்க்கங்களைக் கைவிட்டு நீர்ச்வரவாதிகளாய் வேள்விகள் செய்வதில் முனைந்த வேளையில், அவர்களுடைய கர்வத்தைக் குலைக்கும் பொருட்டுச் சிவன் பிஷாடன வேடம் கொண்டு ரிசி பத்தினிகளையும், திருமால் மோகினியுருப்பூண்டு ரிசிகளையும் மயக்கிய பின் இருவருங் கூடி ஐயனாரைப் பெற்றதாக வழுவூர் ஸ்தலபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும். திருப்பாற்கடலிற் கடையப்பட்ட அமிர்தத்தை அபகரிக்க முயன்ற அசுரர்களை மயக்கவே திருமால் மோகினி வேடம் கொண்டனரென்றொரு கதையும் வழக்கிலுள்ளது.

ஐயனாரைக் கையனாரென்றும் கூறுவர். சிவன் மோகினியின் கையைப் பிடித்ததும் உண்டானதால் அவர் கையனார் எனப்பட்டதாகத் தமிழ் நாட்டிலே கூறப்படுகின்றது. ஹஸ்த நஷ்த்திராபமானி ஆகையாற் கையானார் எனப்படுகிறது என்று மலையாளத்திலே கூறப்படுகிறது.

தமிழ் நாட்டுப் பாமர மக்களிடையே பிரசித்தி பெற்றுள்ள ஐயனாரைப் பற்றி அங்கு வழங்கும் ஒரு கதை, ஐயனார் வழிபாட்டு வரலாறு பற்றிய சமூகவியல் ஆய்வாளருக்கு உதவி பயப்பதாகலாம். சிவனுக்கும் திருமாலுக்கும் பிள்ளையாகத் தோன்றிய ஐயனார் சிவனுடன் சமர் தொடுத்து. "உன்னுடைய இரத்தத்தைக் குடிப்பேன்" என்றாராம். சினங்கொண்ட சிவன் "நீ இரத்தம் குடிப்பவனாவே இரு: சூத்திரபூசை உனக்கு உண்டாகட்டும்" என்று சபித்தாராம். பின்னர் ஐயனார் வேண்டிக் கொண்டதற்கு இரங்கி, மூவரைப் பூசிக்கத் தகுதியில்லாதவரும் உன்னைப் பூசித்து நற்கதி அடையவேண்டும்" என்று சிவன் அருளினாராம்.

தென்னிந்தியக் கிராமங்களில் வடக்குப் புறத்தே ஊர்க்காவல் தெய்வமாக வைத்து ஐயனார் வழிபடப்படுகிறார். அநேக கிராமங்களில் ஐயனாருக்குக் கோவில் உண்டு. புயல், வெள்ளம், வரட்சி, தொற்றுநோய், திருட்டு முதலானவற்றிலிருந்து காப்பாற்றும் பொருட்டுக் கிராம மக்கள் ஐயனாருக்கு நேர்த்திக்கடன் வைப்பதும் விழா வெடுப்பதும் உண்டு.

மேலக்கடற்கரைப் பிரதேசத்திலுள்ள சிவ, விஷ்ணு, கோவில்கள் தோறும் தென்மேற்கு, மூலையில் ஐயனாருக்கென ஆலயம் இருக்கும். மேற்கு மலைத் தொடர்ச்சியில் உள்ள எட்டு மலைச் சிகரங்களில் அவருக்கு ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் சபரிமலையிலுள்ள கோவில் பெரும் பிரசித்தி பெற்றது.

மலையாள நாட்டிலே காளியைப் பூசிப்பது போல, ஐயனாரையும் பார்ப்பார், பூசிப்பார், திருப்பிடவூரில் உள்ள ஐயனாரின் கையில் ஒரு சுவடி காணப்படுகின்றது. சேரமான் பெருமாள் நாயனார் கைலாயத்திலே பாடி அரங்கேற்றிய "ஞானஷலா" திருப்பிடவூர் ஐயனார் மூலமாக வெளிவந்ததாக அங்கு நம்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிற் கிராம தேவதையாகக் கொண்டாடப்படும் ஐயனாருக்குரிய பூசை, பார்ப்பனார் அல்லாத பூசாரிகளாலேயே நடாத்தப்படுகிறது. அக்காவற் தெய்வம் கிராமத்தைச் சுற்றி வந்து கெட்ட தேவதைகளை விரட்டியடிப்பதாக நம்பப்படுகிறது. அத்தெய்வத்திற்கு நன்றி பாராட்ட விரும்பும் அடியார்கள் மண்குதிரை வாகனங்களைச் செய்து கோவில் முற்றத்தில் வைப்பர்.

மேல்மட்ட வாழ்வினர் நவராத்திரி காலத்தில் பொம்மைக் கொலு வைப்பது போலவே, கீழ்மட்ட மக்கள் வேனிற் காலத்தில் மண்குதிரைகள் செய்து ஐயனாருக்குக் காணிக்கையாக வைப்பது "புரவி எடுப்பு" எனப்படும். தமிழ்நாட்டின் பல பாகங்களிற் காணப்படும் ஐயனார் உருவங்களும், குதிரை உருவங்களும் பிரசித்தி பெற்ற கைவினைஞர்களான குலாலர்களின் கலைத்திறனுக்குச் சான்றாகும்.

தமிழ்நாட்டுக் கிராமங்களிற் செவ்வாய் தினமொன்றில் அலரிப் பூப்பறித்து ஐயனாருக்கு வைத்து, அடுத்த செவ்வாய்கிழமை கொடியேற்ற விழாவினை நினைவுபடுத்தும் வகையில் மூன்று கிளைகளையுடைய வேப்பங் கொம்பொன்றினைக் கோயில் முன்றலில் நாட்டுவது முதல் பத்துநாள் நிகழ்ந்து, ஒரு தெருக்கூத்துடனோ சதிர் ஆட்டத்துடனோ நிறைவுறும் விழா கம்பம் திருவிழா எனப்படும்.

யாழ்ப்பாணத்திலே சுன்னாகம், வேலணை, வரணி, அராலி, சண்டிலிப்பாய், அனலைதீவு, காங்கேசன்துறை முதலிய இடங்களில் ஐயனார் கோவில்கள் உண்டு. இவ்வாலயங்கள் பலவற்றிலும் பார்ப்பனரல்லாத பூசாரிகளினாலேயே பூசைகள் நடாத்தப்படுகின்றன. இவ்வாலயங்களுட் பிரசித்தி பெற்றதான சுன்னாகம் ஐயனார் கோவிலில் வதியும் ஐயனார் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன் தாழையம் புதர்கட்கு மத்தியிலே தோன்றியதாகக் கூறப்படுகின்றது. அவ்வாலயத்தின் பின் புறத்தே தாழை மரங்கள் மிகுந்திருந்தமையால் 'தாழைக்குள் அப்பனே' என்றும் அத்தெய்வம் விளிக்கப்படலாயிற்று.

ஐயனாரைப் பூசனை செய்த பெரியாருக்குப் பின் இவருடைய மருமகராகிய கதிரவேலுப் பூசாரியார் பூசகராக பொறுப்பேற்று பூஜைகளை நடாத்தி வந்தார். கனவிலே ஐயன் தோன்றி ஆணை கூறியதன் பிரகாரம் இவரே 1905இல் தேரின் அடித்தளத்தை அமைப்பித்தார். இவருக்குப் பின் இவருடைய பேரனாகிய பெரியதம்பி பூசாரியார் பூஜை ஆராதனைகளையும், கோயிற் பணிகளையும் மேற்கொள்ளல் ஆனர். இவரது காலத்தில் தான் வெள்ளிக் கொடித்தம்பம் ஸ்தாபிமானது. இவ்வாலயத்தில் நிலவி வந்த பலியிடும் வழக்கத்தை நிறுத்த பாடுபட்டவரும் இவரே. அன்பும் அறமும் பேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களாக, கருணையின் இருப்பிடமாக விளங்க வேண்டிய கோயில்களிலே வாயில்லாப் பிராணிகளைக் கதற வெட்டி அழிக்கலாமா? என்று விழிப்புணர்வை ஏற்படுத்திய மகான் பெரியதம்பி பூசாரியரே. சித்தாந்தசரபம் - பழனி ஈசனான சிவாச்சாரியாரின் வழிகாட்டலும் ஆலோசனை களும் இவ்விடயத்தில் இவருக்கு உந்துதல் அளித்தன என்பர். இரத்த வெள்ளமோடிய வீதிகளை அன்பு பெருகும் திருவீதி ஆக்கியவரை யாவரே மறப்பர்?

பெரியதம்பி பூசாரியாருக்குப் பின் அவரது மருமகனாகிய ஐயாத்துரை பூசாரியார் பூஜைகளை மேற்கொள்ளலானார். இவரைத் தொடர்ந்து தற்போது பூஜைகளை ஐயாத்துரை பூசாரியாருடைய மகனாகிய கந்தசாமி பூசாரியாரும் மற்றும் பெரியதம்பி பூசாரியாருடைய மகனாகிய வாமதேவன் பூசாரியாரும் பூஜைகளை செவ்வனே நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு பெரியதம்பி பூசாரியரின் இளைய மகன் பெரியதம்பி ஜெயந்தன் (ஸ்ரீ) முன்னைய காலத்தில் பூஜைகளை நடத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாழை மரங்களுக்குப் பக்கத்திலே ஓர் உழவன் உழுதபோது ஐயனாரின் உருவச்சிலை நிலத்துள் இருந்து வெளிவந்ததாகக் கூறப்படுகிறது. இத்தெய்வத்தின் மகத்துவம் குறித்துப் பல கதைகள் வழங்குகின்றன. கெடுதி செய்கிறவர்களையும், பொய்ச்சத்தியம் பண்ணுகிறவர்களையும் இத்தெய்வம் துன்பத்துக்குள்ளாக்குமென நம்பப்படுகிறது. குரோதத்தால் அங்கிருந்த கொடிச் சேலையை அவிழ்த்த வண்ணான் ஒருவன் குருடாகி மூன்றாண்டு துன்புற்று மாண்டதாகக் கூறப்படுகின்றது. முன்னொரு காலத்தில் வயலில் வேலை செய்த இருவர் மண்வெட்டிகளால் வெட்டுப்பட்டதில் ஒருவன் இறந்துபோனதாகவும், இறந்தவனை மற்றவன் மறைவாகப் புதைத்து விட்டதாகவும், பின் ஐயனாரே நீதிமன்றமேறிச் சாட்சி பகன்று உண்மையை வெளியிட்டதாகவும் கதையொன்று நிலவுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை ஆடுகளும் கோழிகளும் பலியிடப்பட்ட சுன்னாகம் ஐயனார் கோவிலில், இப்போது உயிர்ப் பலியிடப் படுவதில்லை. திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

மற்றும் பௌத்த மக்கள் ஐயனாயக்க தேவரைக் கானகத்தில் வதியும் தெய்வமாகக் கொள்வர். அவருடைய இடத்தில் ஸ்கந்தனும் வைக்கப்படுவதால் இரு தெய்வ வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. சில இடங்களில் ஐயனார் யானை முகத்துடன் காணப்படுகிறார். விநாயக வழிபாடும் சேர்ந்து விட்டதை அது காட்டும். வடமத்திய மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் பிரசித்திபெற்றுள்ள ஐயனாயக்க தேவர் சிங்கள மக்களால் வழிப்போக்கரது தெய்வமாக வழிபடப்படுகிறது. யாத்திரைக்கோ, வேட்டைக்கோ செல்பவர்கள் இவரை வழிபட்டுச் செல்வர். புதிய குளம் கட்டியவுடனும் அறுவடை முடிந்தவுடனும் இவருக்கு விழாவெடுப்பர். அவ்விழா முட்டிமங்கல்ய விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும். இரசகியமான இடமென்று கொள்ளப்படும். ஒரு குளக்கரைக்குச் சென்று. புதிய சிவப்புப் பானைக்குள்ளே ஏற்றி தீபங்களை வைத்து நிவேதனஞ் செய்து ஐயனாயக்க தேவரை வழிபடுவதே இவ்விழாவின் முக்கிய அம்சமாகும்.

சிங்கள மக்களும் ஐயனாயக்கரின் தாய் மோகினியென்றே கொள்வர். கிறிஸ்து சகாப்தத்திற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொடங்கியே அத்தெய்வம் இலங்கையில் வழிபடப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. ஐயனாயக்க தேவர் மதுரையிலிருந்து இலங்கைக்கு வந்ததாகக் கூறும் பரம்பரைக் கதையொன்று சிங்கள மக்கள் மத்தியில் நிலவுகிறது.

புல்வன் பெண்ணுருவங் கொண்டு ஒரு கானகத்திலிருந்த இருடிகளைச் சந்தித்ததாகவும், அச்சந்திப்பின் விளைவாகப் பெண்ணின் வலது பக்க வழியே பிறந்தவரே ஐயனாயக்க என்றும் பழைய சிங்களக் கவி ஒருவர் எழுதியிருக்கிறார். புல்வன் என்று அவர்கள் குறிப்பிடுவது திருமாலையே. திருமால் பெண்ணுருப்பூண்டு சிவனைக் கூடியதாகக் கூறும் கதையின்றும் சற்று மாறுபட்டதாகக் காணப்படுகிறது.

புல்வன் பெண்ணுருக் கொண்டு பெற்ற ஐயனாயக்க என்ற அந்தப் பிள்ளை யானையொன்றின் மீது ஏறிக்கொண்டு தேவர்களின் சபைக்குச் சென்றதாம். தேவர்கள் அவரை வரவேற்றனர். புத்தர் மல்லவ வனத்துக்குச் சென்ற போது உலகினை ஐயனாயக்காவின் பொறுப்பில் விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

ஐயனாயக்கா ஆயிரக்கணக்கான தெமலயக்கர்களோடும் (தெமலயக்க' புத்தரால் அடக்கப்பட்ட அரக்கன் என்று சொல்லப்படுகிறது. மல்லவ தேசத்தின் ஐந்து பெருந்தெய்வங்களோடும் நாற்பது முழ நீளப் படகொன்றிற் கடற்பயணம் தொடங்கினாராம். அப்படகு கம்பிலியக்க என்பவன் பல தேசங்களிலிருந்தும் பெற்ற பளிங்குப் படிவத்தைக் கொண்டு ஏழடுக்குக் கூடாரங்கொண்டதாக நான்கு மாதங்களில் உருவாக்கப்பட்டதாம். அப்படகு இடைவழியில் நீருக்குள்ளே தாழத் தொடங்க மல்லவ தெய்வங்கள் ஒரு யானையைப் பலியிட்டு அதனை மிதக்க வைத்தனவாம்.

அப்படகு யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததாகவும், ஐயனாயக்க தேவர் அங்கிருந்து வெள்ளை யானையொன்றிலேறிக் கடலோரப் பாதை வழியே களுத்துறையிலுள்ள ஆலயத்தை அடைந்ததாகவும், வீரக்குழிய என்னும் இடத்தில் ஓராலயத்தைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது. புவனேகபாகுவின் ஆட்சிக் காலத்திலே ஆரியவம்ச இளவரசியுடன் ஐயனாயக்க இலங்கைக்கு வந்ததாகக் கூறும் ஒரு வரலாறும் வழக்கில் உள்ளது. முத்துமாரியுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைத் தொடர்புபடுத்துவர். ரன்ஹலம்ப கவி, ஹலம்ப சாந்திய ஆகிய சிங்கள நூல்களிலே நெருப்பை உண்டாக்குவதாகக் கருதப்படும் ஐயனாயக்கரின் வளையல் பரவப்படுகிறது.

ஐயனார் என்ற சொல் 'சாஸ்தா' அல்லது 'சாத்தான்' என்னும் வடசொல்லிருந்து பிறந்ததென்றும்,'சாஸ்தா' என்பது புத்தருக்குரிய பெயர்களுள் ஒன்று என்றும் கூறும் *மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள், தமிழ்நாட்டிற் பௌத்த மதம் அழிந்த பின்னர் இந்துக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு பௌத்த தெய்வமே ஐயனார் என்பர்.

“இந்தத் தெய்வம் பௌத்தம், சமணம் என்னும் இரு சமயங்களிலிருந்து இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாகச் சமணர் இதனை இன்றும் வணங்குகின்றனர். இத்தெய்வத்திற்கு “பிரம்மயட்சன்” “சாத்தனார்” முதலிய பெயர்களை அவர்கள் கூறுகின்றனர். சமணராக இருந்து இந்துக்களாக மாறிய ஆருகதர்களால் இது இந்து மதத்தில் புகுத்தப்பட்டிருக்க வேண்டும். பௌத்த ஐயனாருக்கும் சமண ஐயனாருக்கும் உள்ள வேற்றுமை யாதெனில் பௌத்த ஐயனாருக்கு வாகனம் குதிரை; சமண ஐயனாருக்கு வாகனம் யானை என்பதே” என்று மயிலை சீனி வேங்கட சாமி அவர்கள் இன்னோரிடத்தில் கூறுகிறார். ஐயனாரின் வாகனங்களாக யானை, குதிரையாகிய இரண்டும் கொள்ளப்படுவதை இங்கு அவதானிக்கலாம்.

ஐயனாரை பௌத்தமதத் தெய்வமென்றும், சமணமதத் தெய்வமென்று கூறும் திரு.வேங்கட சாமியின் கூற்றுச் சிறிதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. புத்தரின் பெயரான 'சாஸ்தன்' ஐயனாராயிற்றென்றால், சமணர்கள் அவரை ஏன் வழிபட வேண்டுமென்பது தெரியவில்லை. சமண ஐயனாருக்கும் பௌத்த ஐயனாருக்கும் இடையிலே வாகனத்தில் மட்டும் வேற்றுமை காணும் திரு.வேங்கடசாமி, சமண ஐயனாரின் வாகனமே யானை என்கிறார். ஐயனாயக்க தேவசபைக்குச் சென்றதும், யாழ்ப்பாணத்திலிருந்து களுத்துறைக்குச் சென்றதும் யானையிலென்று பௌத்த மக்கள் நம்புவதை அவர் அறியார் போலும்.

“சாஸ்தன்” என்பதே ஐயனாராயிற்றென்பதும், ஐயனார் பௌத்தமதத் தெய்வமென்பதும், உண்மையானால், அவரை ஐயனாயக்க என்றும் ஹரிகரபுத்ர என்றும் புல்வனின் புத்திரர் என்றும், மோஹினியின் குமாரர் என்றும், புத்தரால் உலகினைக்காக்க நியமிக்கப்பட்டரென்றும், மதுரையிலிருந்து இலங்கை வந்து யானையிலேறிக் களுத்துறை சென்றவரென்றும் பௌத்த மக்கள் கருதிவரக் காரணமில்லை. இந்து மதத்தினர் வழிபட்ட தெய்வத்தைப் பௌத்தரும் சமணரும் தங்கள் மதங்களோடு இணைத்துக் கொண்டனரென்று ஏன் கொள்ளக்கூடாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபக்தர்களுக்கும், விஷ்ணு பக்தர்களுக்கும் இடையே ஒற்றுமையைக் கொண்டு வருவதற்கு அரிகரபுத்திர வழிபாடு தொடக்கப்பட்டதாக வரலாற்றுப் பேராசிரியர் கோசாம்பி கூறுவர். வைதிக சமயத்தினர் தம்முள் மோதிக் கொண்டது. இம் மதங்களைச் சிதைக்க முயன்ற அந்நிய மதத்தினருக்கு உதவியாக இருந்ததால், அவர்களுக்கிடையே ஒற்றுமையைக் கொண்டுவர வேண்டியது அவசியமாயிற்றென்றும், ஒரு பாதி சிவனாகவும், மறுபாதி விஷ்ணுவாகவும் உருக்கொண்ட அரிகரர் வழிபாடு ஒன்பதாம் நூற்றாண்டு முதல் முக்கியத்துவம் பெறலாயிற்றென்றும் கூறுவர் இப்பேராசிரியர்.

முதலாம் இராசராசன், இரண்டாம் இராசராசன் ஆகியோர் காலங்களில் ஐயனார் கோயில்கள் சோழநாட்டில் இருந்தமைக்குரிய சான்றுகள் உளவெனினும், இருபெரும் இந்துக் கடவுளர்களான சிவனும் திருமாலும் (பாதிபாதியாய் அர்த்தநாரீஸ்வர உருவத்தைப் போல) இணைந்த அரிகர உருவங்களுட் காலத்தால் முந்தியதென அறியப்படுவது கம்பூச்சியாவைச் சேர்ந்ததாகும். ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த அழகான அவ்வுருத்தை ஆனந்தக் குமார சுவாமியின் (History of Indian and Indonesian art, figure) நூலிற் காணலாம்.

ஐயனார் குறித்துத் தென்னகத்தில் வழங்கும் ஒரு கதை சுவாரஸ்யமானது. சோழ மன்னன் ஒருவன் வடமொழிப் புலவர்களுடன் வடநாட்டுயாத்திரை மேற்கொண்டான். தெலுங்கு தேசத்தின் ஓர் இடத்தில் ஐயனார் மூக்கின் மேல் விரலை வைத்த வண்ணம் காணப்பட்டார். அவர் எதை நினைத்து அவ்வாறு இருக்கிறார் என்பதைச் சரியாகக் கூறினாற் கையை மூக்கிலிருந்து எடுத்து விடுவார் என அங்குள்ளோர் கூறினர். மன்னன் பண்டிதர்களை நோக்கினான். 'விஷ்ணுவின் புதல்வனாகையாற் பிரம்மனுக்குச் சமன். தேவர்களால் வணங்கப்படுகிறேன். ஆனால், சிவனது புதல்வனாகையாற் பூதபிசாசுகளாற் சூழப்பட்டிருக்கிறேன் என்று கவலைப்படுகிறார்' என்றொரு பண்டிதர் கூறியபோது ஐயனாரின் கை அசையவில்லை. அப்பைய தீஷிதர் என்ற கவி மேல் வரும் பொருள்படும் சுலோகத்தைக் கூறியவுடன் ஐயனார் மூக்கின் மேலிருந்து விரலை அகற்றினாராம். 'தந்தை எவ்வளவு பெண்களை மணந்தாலும், தனயனுக்குத் தாயாதலின் பார்வதியை அம்மா என்று அழைப்பேன். லக்ஷிமியை எவ்வாறு அழைப்பது? தாய்க்கு மனைவியாயிற்றே! என்று வியப்புக் கொண்ட ஐயனாரை இஷ்டத்தைப் பெறத் துதிக்கிறேன்.

பேராசிரியர் சி.தில்லைநாதன்

நன்றி: பேராசிரியர் சி.தில்லைநாதன் மணிவிழா மலர்,
திருஞானம் பவளவிழா மலர்,
தாளை மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் வருஷப்புலம்
# ஸ்ரீ மகாமாரி அம்பாள் வரலாற்றுப் பாதையில்
# அமரர் பெரியதம்பி ஜெயந்தன் அவர்களது பங்களிப்பு

**முகவுரை**

சுன்னாகம் நகரின் வடபால் வரிசப் புலத்தில் கோயில் கொண்டிருக்கும் மகாமாரி அம்மன் ஆலய வரலாற்றைத் தெரிந்தவரை எழுதுவதே இக் கட்டுரையின் முக்கிய அம்சமாகும். கோயில் வரலாற்றை எழுதுவதற்கு முன்னோடியாக இப்பிரதேசத்தின் ஆதி வரலாற்றை சற்று நோக்குவோம்.

சுன்னாகம் கந்தரோடைப் பகுதிகள் பண்டைய சரித்திர எச்சங்கள் நிறைந்த பிரதேசங்களாகும். விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே அதாவது நுண் கற்காலத்தில் இங்கு நகர அமைப்பு இருந்ததாகவும். இது திராவிட இனக் குடி இருப்பாக இருக்கலாமென்றும் சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்பதே தொல்லியலாளர்களின் கருத்தாகும். இக்கருத்துக்களின் வழியாக மாவிட்டபுரத்தைத் தொடர்புபடுத்தி மாருதப் புரவீக வல்லியை சுன்னாகத்தில் ஆண்ட உக்கிரசிங்கன் மணம் முடித்ததாக இலக்கியம் சார்ந்த வரலாறுகள் கூறுகின்றன.

கந்தரோடையைக் கதிரமலை இராச்சியம் என்றும் சொல்வர். கந்தரோடையின் சரித்திர எச்சங்களைவிட சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயம் அமைந்துள்ள சிறுமலைப் பகுதியை (மேட்டுப் பகுதியை) தொல்லியலாளர்கள் ஆராய்வது, உக்கிரசிங்கனின் ஆட்சிக்குச் சிலவேளைகளில் வலுச் சேர்க்கலாம். கி.மு 7ம் நூற்றாண்டில் இவ்வரசு இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

தொல்லியலாளர்களால் கந்தரோடைப் பகுதிகளில் அவ்வவ்போது எடுக்கப்படும் நாணயங்களைக் கொண்டு, அதில் காணப்படும் குத்து விளக்குகள் மற்றும் மீன்கள் தென்னிலங்கையில் அன்றிருந்த நாணயங்கள் எதிலும் காணப்படவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுவதால் கந்தரோடை சுன்னாகம் பகுதியில் தமிழர்கள் இருந்திருப்பர் என்பது ஊகமாகிறது.

**காலப்பகுதி**

மேலே குறிப்பிட்ட சரித்திரச் சான்றுகள், கவிதைகள் நிரம்பிய சுன்னாகத்தின் வடபால் உள்ள வரிசப்புலப் பகுதியில் அமைந்திருக்கும் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாமாரி அம்மன் கோயில் ஆகும். இக்கோயிலை ஆதியில் முத்துமாரி அம்மன் கோயில் என்று அழைத்தார்கள். இக்கோயிலின் தோற்றம் வளர்ச்சி பற்றி இனிப் பார்ப்போம்.

சுன்னாகத்தில் ஐயனார் கோயில், கதிரமலைச் சிவன்கோயில், மயிலணிக் கந்தசுவாமி கோயில் என்பன அமைக்கப்பெற்ற காலத்திற்குப் பின்பே வருசப்புல மகமாரி அம்மன் கோயில் அமைக்கப்பெற்றது என்று கருத இடம் உண்டு. மேற்கூறிய கோயில்கள் பற்றிப் பாடல்களிலிருந்தும் (ஊஞ்சல்) குறிப்பாக ஊஞ்சல் பாடிய புலவர்கள் வாழ்ந்த காலங்களைக் கொண்டும் பார்த்தால் இது மற்றைய ஆலயங்களில் பின்பே அமைக்கப்பெற்றது என்பதை அறியலாம். அண்ணளவாகக் கணித்தால் இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் இது உருவானதாக அறியலாம்.

**தோற்றம்**

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய காலப்பகுதியில் ஆட்கொல்லித் தொற்று நோய்களான வாந்திபேதி, கொலரா போன்ற நோய்கள் வந்து மக்களை வாட்டின. இந்த நோய்கள் வந்ததால் ஒரு காலப்பகுதியில் ஒவ்வொரு ஊரிலும் நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். எல்லாக் கிராமங்களிலும் இது சர்வசாதாரணம் இதனால் இறந்தவர்களின் உடலை தங்கள் வளவுகளுக்குள் புதைத்தனர்.

வருசப்புலப் பதியும் இதற்கு விதிவிலக்கல்ல. பலர் இறந்தார்கள். தக்க மருந்துகள் கிடைப்பதில்லை. மரணங்கள் மலிந்த பூமியாக இருந்தது. இதனால் அக்கால மக்கள் கடவுளையே நம்பி வழிபட்டு வாழ்ந்தனர்.

அன்று இந்தக் கொள்ளைநோயால் ஒரு கன்னிப் பெண் இறந்துவிட்டாள். மாலை நேரம் இறந்தால் அப்பெண்ணின் உறவினர்கள் அடுத்தநாள் அடக்கம் செய்யலாமென்ற முடிவெடுத்தவர்களாய் இறந்த அக்கன்னிப் பெண்ணின் உடலை பாயினால் சுற்றி வீட்டின் திண்ணை ஓரத்தில் வைத்து விட்டனர். அடுத்தநாட்காலை அவர்கள் எழுந்து பார்த்தபொழுது பாயினால் சுற்றப்பட்டிருந்த அப்பெண் திண்ணையில் குந்திக்கொண்டிருந்தாள். இதனைக் கண்ட உறவினர்கள் பயந்தார்கள், ஆச்சரியப்பட்டார்கள், செய்வதறியாது திகைத்து நின்றார்கள்.

"அதேவேளை அக்கன்னிப் பெண் அங்குள்ளோரைப் பார்த்து நீங்கள் ஒன்றுக்கும் பயங்கொள்ள வேண்டாம். இனிமேல் உங்களுக்கு நோய்கள் எதுவும் வராது நான் காப்பாற்றுவேன்" என்று கூறி எழுந்து நடந்து மறைந்துவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது என்ன புதுமை? இது தெய்வத்தின் விளையாட்டோ என்று எண்ணியவர்களாய் இது கடவுளின் செயல்தான் என்று நம்பினர். இது அம்மனின் திருவிளையாட்டாகக் கருதினர். மரத்தடியில் கல்லொன்றை வைத்து முத்துமாரி என்று வழிபடத் தொடங்கினர்.

மரத்தடியில் வைத்துப் பூசித்தவர்கள் அம்மனுக்கு சிறுகொட்டில் போட்டு வழிபடத் தொடங்கினர். ஊரவர்களெல்லாம் கூடிவழிபடத் தொடங்கினர். அயல் ஊரவர்கள் இந்த செய்தி கேட்டு வந்து வழிபடத் தொடங்கினர். திருவிளக்கு ஏற்றித் தினந்தினம் வழிபட்டனர். ஆசாரசீலரான ஒரு முதியவர் வெள்ளி, செவ்வாய் நாட்களில் பூசை செய்து வந்தார். உருவேறத் திருவேறும் என்பார்கள். தொழத்தொழ அம்மனின் அருட்கடாட்சம் கிட்டிய மக்களெல்லாம் மேன்மையுறத் தொடங்கினர்.

**கட்டடம்**

ஊர் மக்கள் கூடி சுண்ணாம்புக் கட்டடம் அமைத்து அம்மனை அதிலிருந்து வழிபட்டனர். குருக்கள் பூசை செய்யவேண்டும் என்று விரும்பிய மக்கள் பூசை செய்வதற்கு பூசகர் ஒருவரை ஒழுங்கு செய்தனர். அவர் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்களின் தந்தையராவர். அவரின் பக்திச் சேவையால் முத்துமாரி அம்மனின் கோயில் பொலிவுற்றது. நித்திய பூசைகள் நடைபெற்றன. பக்தர்களின் தொகை நாளுக்கு நாள் கூடிச் சென்றது. ஊரே புனிதம் அடைந்ததென்று முன்னோர் சொல்வார்களாம். தந்தையாரின் உடல் நிலை குன்றியதால் சபாரத்தினக் குருக்கள் அவர்கள் நித்திய பூசைகளை ஏற்றுக்கொண்டார். 1910 களில் நைமித்திய பூசைகள் நடைபெறத் தொடங்கின. குறிப்பாக திருவெம்பாவை, நவராத்திரி விழா போன்றவைகளுடன் நாளடைவில் அலங்கார உற்சவங்களும் நடைபெறத் தொடங்கின.

**பரிபாலன சபை**

கோயிலும் கொங்கிறீற் கல் கட்டடமாக மாற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஊர்மக்கள் கூடி பரிபாலனசபை உருவாக்கினர். படித்துப் பெரும் பதவி வகித்த பெரியோரோடு இளையோரும் கோயிலை மேம்படுத்தத் தொடங்கினர். ஏற்கனவே எழுந்தருளி விக்கிரகம் செய்யப்பட்டது. சுவாமி வீதிவலம் வருவது வழக்கமாகியது. இறைவியை ஊஞ்சலிலிருந்தி பூசைகள் செய்தனர். ஊஞ்சல் பாட்டினை சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் இயற்றிக் கொடுத்தார். வருடாவருடம் இப்பாடலைப் பாடி இறைவியை வழிபட்டனர். நீண்டகாலம் படித்து வந்த ஊஞ்சல்பாட்டு அனர்த்தங்களால் தவறிவிட்டதால் இணுவில் கலாபூஷணம் நா.வீரமணி ஐயர் அவர்களால் ஊஞ்சற் பாடல் மீள எழுதப்பெற்றது. அதுவே இப்பொழுது பாடும் வழக்கத்தில் உள்ளது. அப்பாடலில் சில வரிகளைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளணி குங்குமமும் மாலையாட
மன்னு செவிக் குண்டலங்கள் மின்னி ஆட
கஞ்ச மலர் விழியருளைப் பொழிந்து ஆட
கரம் அபய விரதங்கள் கனிந்தே ஆட
எனத் தொடர்கிறது ஊஞ்சல் பாட்டு.

### மகமாரி கோயிலாகப் பெயர் பெற்றமை

1950 களிற்குப் பின் வருசப்புலம் மகமாரியென்று பெயர்பெற்ற இக்கோயில் அபரித வளர்ச்சி கண்டதற்கு அம்பாளின் அருட்கடாட்சம் என்றே கூறலாம். கோயிலின் முழுப்பகுதிகளும் பெருங்கோயிலாக மாறத் தொடங்கியது. உள்வீதி தூண்கள் நிறுவப்பட்டு தரைக்கு சீமேந்து போடப்பட்டது. அடுத்த பன்னிரு ஆண்டுகளின் பின் கோயிலில் மேலும் விசேட அம்சங்கள் பெருகின.

விசேடமாக சுற்றுப்பிரகாரத்தில் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதனை ஊர்மக்கள் சேர்த்து உபயமாக மேற்கொண்டு இக்கைங்கரியத்தை நிறைவேற்றினர். விநாயகருக்கு, பாமா ருக்மணி சமேத கோபாலருக்கு, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியருக்கு, சேத்திரபாலருக்கு தனித்தனி கோவில்கள் அமையப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் மணிக்கோபுரம் உருவாக்கம் பெற்றது. நீண்டகாலமாக அலங்காரத் திருவிழாவாக இருந்து வந்ததை மகோற்சவமாக மாற்றி வழிபடவேண்டும் என ஊர்மக்கள் விரும்பினர். அம்பாள் கிருபையால் 2000ம் ஆண்டில் மகோற்சவம் நடைபெறும் கோயிலாக மாற்றம் பெற்றது.

### மகோற்சவக் கோவிலாகியது

2000ம் ஆண்டில் கொடித்தம்பம் நிறுவப்பட்டு சித்திரத்தேர் அவ்வாண்டிலே வெள்ளோட்டம் கண்டு தேரில் அம்பாள் திருவீதியுலாவும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இத்தேர் உருவாக்கத்திற்கு தேர் திருப்பணிச் சபையை உருவாக்கி உள்ளூர், வெளியூர் நிதியுதவியுடன் இத்திருப்பணியைப் பூர்த்தி செய்தனர்.

மேலும் 2005ம் ஆண்டில் ஓர் அன்னதான மண்டபம் வேண்டுமென விரும்பிய ஊர்மக்கள் அன்னதான திருப்பணிச்சபையை உருவாக்கி 2008ம் ஆண்டு தைத்திங்கள் 18ம் நாள் அதற்கான கால்கோள் நடைபெற்று திருப்பணிகள் முடிவுற்று மண்டபத்தில் திருமண நிகழ்வுகள், பல்வேறு சமூக நிகழ்வுகள் என்பன நடைபெற்று வருவதும் காணக்கூடியதாக உள்ளது. இந்த வகையில் அமரர் பெ. ஜெயந்தனும் திருப்பணிச் சபைக்கு பெரும் உதவியாக இருந்து நிகழ்வுகளுக்குத் தன்னாலான உதவி செய்தவர் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. மேலும் கோபுரம், கோயில் புனருத்தாரணம் நடைபெற்று கும்பாபிஷேக நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

கிராமத்தவரும், உள்நாட்டவரும் மட்டுமன்றி வெளிநாட்டில் வாழும் அம்பாள் பக்தர்களின் பேருதவியாலும் உருவாகிய இத்திருத்தலத்தில் சீரும் சிறப்புமாக ஆகம விதிப்படி கோயிலின் நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. காலத்துக்குக் காலம் பரிபாலன சபையினரின் பெரு முயற்சி களினாலும், அர்ச்சகர்களின் நற்சேவைகளாலும் அம்பாளின் கிருபையாலும் கோயில் நல்ல நிலையில் வளர்கிறது.

**பாடல் பெற்ற ஸ்தலம்**

பாடல் பல பெற்ற பெருமைமிக்கது வருசப்புலம் மகாமாரி அம்மன். 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் இத்திருத்தலத்திற்கு ஊஞ்சற் பாடல் பாடியது ஒரு விசேட அம்சமாகும். இந்த ஊஞ்சற்பாட்டு பன்னெடுங்காலமாகப் பாடப்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாடல் இலங்கையில் காலத்துக்காலம் ஏற்பட்ட அனர்த்தங்களால் தொலைந்து விட்டது. அதன் பின் இணுவில் பிரம்மஸ்ரீ நா.வீரமணி ஐயர் அவர்கள் ஊஞ்சல் பாடல் எழுதியுள்ளார். அந்த ஊஞ்சல் பாட்டே இன்று வழக்கத்தில் இருந்து வருகிறது.

அந்த ஊஞ்சல் பாட்டில் விநாயகர் துதியில்

**"சுன்னாகப்பதி வரியப் புலத்தில் வாழ்ந்து சோபனமாய் சுபமருளும் மகாமாரிக்கே"** என வருகிறது.

இன்னொரு பாடலில்

**"ஆசியருள் நல்வரியப் புலத்தில் மேஷம்**
**ஆரணியே மகாமாரி ஆடீர் ஊஞ்சல்"** என்று அம்மனின் அருள் பிரவாகத்தைக் குறிப்பிடுகிறார்.

பிறிதொரு பாடலில்

**"கமலமலர்க் கழலிணைகள் கருணையோடு**
**காசினியில் பத்தருக்கே அருளும் தேவி"**
எனச் சிறப்புச் சொல்லப்படுகிறது.

அந்தத் திருவூஞ்சல் பாடலிலே பராக்கு என்ற பகுதியிலே பின்வருமாறு வருகிறது.

**சிங்கவா கினியே தேவி பராக்கு**
**சிற்பதையே கற்பகமே மாரீ பராக்கு**
**அங்கயற் கண்ணியே அயீ பராக்கு**
**ஆனந்த பைரவியே சூலி பராக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் கலாபூஷணம் மகாவித்துவான் நா.வீரமணிஐயர் அவர்களின் ஊஞ்சல் பாடல்களைத் தொடர்ந்து மகாமாரி அம்மன் கவசத்தினை பண்ணிசைப் பாவலர் கலாபூஷணம் க.துரைசிங்கம் அவர்கள் பாடியுள்ளார். அக்கவசம் வருசப்புல மகாமாரி அம்மனை முதன்மையாக வைத்து யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கோயில் கொண்டுள்ள மாரியம்மன்களைப் பரவிப் பாடுவதாக அமைந்துள்ளது.

அக்கவசத்தில் வரும் சில வரிகளைக் கவனிப்போம்.

**குண்டல நாயகி குணநிதி போற்றி**
**மண்டலம் காக்கும் மகாமாரி போற்றி** என்றும்

**உருத்திர அம்சமாய் ஊரெல்லாம் இருப்பாய்**
**வந்திடும் மக்களை வசமாய்க் காப்பாய்** என்றும்

**கருமாரி அம்மனாய் கண்ணுடைய அம்மனாய்**
**வரும் பகை தீர்த்து வாழ்ந்திட வைப்பாய்** எனவும் தொடர்கிறது.

**சிம்ம வாகினி சிவனின் மோகினி**
**எம்மை காத்தருள் மகமாரி தாயே**
என இறைவியை வேண்டுகின்றார்.

இக்கவசமும் அம்மன் கீர்த்தனைகளும் அம்மன் மேல் கவிஞர் துரையரால் ஆக்கப்பெற்ற வில்வ அர்ச்சனைப் பாடலும் திருமதி மு. நாகேஸ்வரி ஆக்கிய நாம அர்ச்சனையும் சங்கீத பூஷணம் S.R தர்சனன் பாடி ஒலி நாடாவாக வெளி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கவிஞர் துரையர் வரிஷைப்புல அம்மன் மீது இயற்றிய கீர்த்தனை சங்கீத பூஷணம் S.R தர்சனனால் பாடப்பெற்று இலங்கை வானொலி ஒலிக் களஞ்சியத்தில் உள்ளது. இக்கீர்த்தனையை வானொலி நிலையத்தினர் இடையிடையே ஒலிபரப்புவார்கள். அக்கீர்த்தனையில் சரணம் ஒன்றினைக் கவனிப்போம்.

**அபிடேக நாயகியே அலங்கார நாயகியே**
**குவிந்திடும் அடியார்க்கு குறையிலா வளமருளும்**
**பவித்திர நாயகியே படர்சடை நங்கையே**
**கவித்துவம் உன்மனி காணும் எமக்கின்பம்.**

என இறைவியின் சிறப்பினை இப்பாடல் எடுத்துக் காட்டு கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசப்புல மகமாரியை அனுதினமும் வழிபட்டோர் அருட்கடாட்சத்தைப் பெறுகின்றார்கள். "நம்பினார் கெடுவதில்லை" பல ஊர் மக்களையும் தன்பால் ஈர்த்து அருள்பொழியும் தேவியின் பெருமை சொல்லிலடங்கா. மாங்கல்யம் வேண்டியும், மகப்பேறு வேண்டியும், சுகம் பெற்றவர்கள் ஏராளம். பக்தி கொண்ட மக்கள் அம்மனுக்குப் பொன்னென்றும் பொருளென்றும் வாரி வாரி வழங்குவது கண்கூடு. அம்பாளும் அடியவர்கள் வேண்டுவதை ஈந்தவண்ணம் இருக்கிறாள்.

அம்பாளின் திருவடியை நம்பி வழிபட்டால் நிச்சயம் கேட்டவரம் தருவாள். அவளின் அருட்பாதத்தை உள்ளன்போடு பூசித்தவர்கள், நேசித்தவர்கள் என்றும் இன்பமடைகிறார்கள்.

"தொழுவார்க்கருளும் தூமணியே போற்றி"

**முக்கிய குறிப்பு :**

இவ்வாலய வரலாற்றினை எழுதுவதற்கு செவிவழிக் கதைகளுடன் நிதர்சனத் தகவல்களையும் தந்துதவிய திருமதி செல்லப்பா பூரணம்மா, திருமதி முருகேசு நாகேஸ்வரி, திருமதி இராசா சின்னம்மா, திருமதி சுப்பிரமணியம் இராஜேஸ்வரி மற்றும் இன்றைய கோயில் நிர்வாகத்தினர் ஆகியோருக்கு நன்றிகள்.

நன்றி : பவளவிழா மலர் "திருஞானம்"
கலாபூஷணம் க. துரைசிங்கம்
ஓய்வுபெற்ற அதிபர்

**சிறந்த குணத்தை உருவாக்கும், மனவலிமையை வளர்க்கும், அறிவை விரியச் செய்யும் ஒருவனைச் சொந்தக் காலில் நிற்கச் செய்யும் கல்வியே தேவை.**

*- சுவாமி விவேகானந்தர் -*

விட்டுக்கொடுத்து, மற்றவர்களுக்காக வாழ்கின்ற வாழ்க்கைதான் தன்னையும் வாழ வைக்கும் பிறரையும் வாழவைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

அருளிச் செய்த

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! 1.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்று மைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே! 2.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே! 3.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்!
வடநூற் கடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளங்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! 7

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்!
நளினாசனஞ் சேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப்பெருஞ் செல்வப் பேறே!
சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே! 10

## சரஸ்வதி துதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் வெள்ளை
அரி யாசனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன் பாதம் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அம்பாள் துதிப் பாடல்

அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே
இம் மாநிலத்தில் நீதானே
எங்கள் துர்க்கை தாய்தானே (அம்மா அம்மா)

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா (அம்மா அம்மா)

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா (அம்மா அம்மா)

சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)


நின்றால் நடந்தால் உன் நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா (அம்மா அம்மா)

- கூட்டு வழிபாட்டு பாமாலை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நன்றி நவில்கின்றோம்

## அமரர். பெரியதம்பி ஜெயந்தன்

அவர்கள்

இறைபதமடைந்தவேளை ஆறுதலளித்த
உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள்
அனைவருக்கும், உடன் வந்து உதவி புரிந்தோர்களுக்கும்,
இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து கலந்து
கொண்டவர்களுக்கும்,
உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும்
தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், பதாதைகள் மூலம்
அனுதாபம் தெரிவித்தோருக்கும்,
மேலும் பல உதவிகளை வழங்கிய அன்பர்களுக்கும்,
கிரியைகள் சிறப்பாக நடாத்திய குருமார்களுக்கும்,
அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்துகொண்ட
அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

வருஷப்புலம்,
சுன்னாகம்.
16-02-2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org